செ.வெ.எண் 46 நாள்: 30.09.2020

**பெரம்பலூர் மாவட்டம்**

**ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் நடைபெற்ற பாரம்பரிய உணவுத் திருவிழாவினை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ராஜேந்திரன் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்.**

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் அண்ணா பேருந்து நிலையத்தில் (புதிய பேருந்து நிலையம்) நடைபெற்ற பாரம்பரிய உணவுத் திருவிழாவினை முன்னிட்டு மாவட்ட வருவாய் அலுவலா் திரு. ராஜேந்திரன் அவர்கள் இன்று (30.09.2020)குத்து விளக்கு ஏற்றி வைத்து துவக்கி வைத்தார்.

மத்திய, மாநில அரசுகள் ஆரோக்கியமான, வளமான, அறிவார்ந்த சமுதாயம் உருவாக வேண்டும் என்பதற்காக, குழந்தை பருவத்திலிருந்தே அவர்களுக்கு தேவையான ஊட்டச்சத்தினை வழங்கிட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாடினை நிவர்த்தி செய்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் ஊட்டச்சத்து மாதமாக அனுசரிக்கப்படுகிறது. கர்ப்பினி பெண்கள், வளரிளம் பெண்கள், ஊட்டச்சத்து பற்றாக்குறையினாலும், பாதிப்படையாமல் இருப்பதற்காகவும், இதுகுறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலமும், இரத்தசோகை, பிறப்பு எடை குறைபாடு, புரதச்சத்து குறைபாடு போன்றவற்றிலிருந்து பாதுகாக்கலாம். இரும்புச்சத்து நிறைந்த பச்சைக் காய்கறிகள், நாட்டுக் காய்கறிகளை தமது இல்லத்தின் அருகிலேயே வீட்டுத் தோட்டம் உருவாக்கி குறைந்த செலவில் உற்பத்தி செய்து பயன்படுத்தும்போது ஆரோக்கியமான சமுதாயம் உருவாக்கிடலாம்.

ஒவ்வொரு வீட்டிலும் குறைந்த செலவுள்ள கத்திரி, வெண்டை, பீன்ஸ், கொத்தவரை, சுரைக்காய், பூசணி, பறங்கி, புடலை, தக்காளி மற்றும் கீரைகளை விளைவித்து, குடும்பத்தினருக்கு அளிப்பதன் மூலம் அவர்கள் அன்றாடத் தேவைக்கான ஊட்டச்சத்துக்களை எளிதில் பெறமுடியும். இதுகுறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக அங்கன்வாடி மையம், வட்டார மாவட்ட அளவில் 1,09,170 விழிப்புணர்வ நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளது. அனைத்து ஊராட்சி அலுவலர்களுடன் காணொளி காட்சியின் வாயிலாக ஆய்வு மேற்கொண்டதன் மூலம் 143 ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள், 320 சரிவிகித உணவு குறைபாடு உள்ள கர்ப்பினி பெண்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு தேவையான இணை உணவு வழங்கப்பட்டுள்ளது. சமுதாயத் தோட்டம் ஏற்படுத்தும் வகையில் 102 சமுதாய தோட்டங்களும், 3,623 வீட்டுத் தோட்டமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் 6 மாதம் முதல் 5 வயது வரை உள்ள 27590 குழந்தைகளுக்கு 76,582.625 கிலோ கிராமும், 4,412 கர்ப்பினிகளுக்கு 18,199.5 கிலோ கிராமும், 3458 பாலூட்டும் தாய்மார்களுக்கு 14,264.25 கிலோ கிராமும், 4 பள்ளி செல்லா வளரிளம் பெண்களுக்கு 16.5 கிலோ கிராம் இணை உணவு வழங்கப்பட்டுள்ளது. 2 முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 01.09.2020 முதல் 30.09.2020 வரை 11,912 குழந்தைகளுக்கு 29541.76 கிலோ கிராம் அரிசியும், 20,250.4 கிலோ பருப்பும், 1,54,856 முட்டையும் வழங்கப்பட்டுள்ளது.

எனவே பெற்றோர்கள் மற்றும் தாய்மார்கள், கர்ப்பினி பெண்கள், எதிர்கால சமுதாயம் ஆரோக்கியமானதாகவும், வளமானதாகவும் உருவாகிட சத்தான உணவுகளை உட்கொள்ள வேண்டும். இதுகுறித்து அரசு வழங்கி வரும் நலத்திட்டங்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

இவ்விழாவில் கோதுமை மாவு, வெல்லத்தூள், சோயா மாவு, வறுத்த கேழ்வரகு மாவு, செறிவூட்டப்பட்ட பாமாயில், முளைகட்டிய கேழ்வரகு மாவு, தாது உப்புக்கள் மற்றும் வைட்டமின்கள் ஆகியவை 30 நாட்களுக்கு தேவையான புரதச்சத்து பொருட்கள் அடங்கிய

பைகள் 30 பாலூட்டும், கர்ப்பினி மற்றும் வளரிளம் பெண்களுக்கு இணை உணவுகளையும், மரக்கன்றுகளையும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில் மகளிர் திட்ட அலுவலர் எம். ராஜமோகன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் தி. புவனேஸ்வரி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அருள்செல்வி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் கே. நாகராஜபூபதி, பெரம்பலூர் நகராட்சி ஆணையாளர் குமரிமன்னன், வட்டாட்சியர் பாரதிவளவன், வட்டார குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் ரெ.பிரேமஜெயம், பெ.அருணா, க.பூமா, போஷான் அபியான் (தேசிய ஊட்டச்சத்து குழுமம்) ஒருங்கிணைப்பாளர் சௌந்தரவள்ளி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**